ஓலை 44 | ஓசை 155 | மடங்கல்(ஆகத்து) 2023

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉ மன்று.**

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே, மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

**Translation:**

The good of inward excellence they claim,
The perfect men; all other
good is only good in name.

**Explanation:**

The only delight of the perfect is
that of their goodness;
all other (sensual) delights are not
to be included among any (true) delights.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# காலத்தால் அழியாத காமராசர்

### பா வகை - நான்கடி தரவு கொச்சக கலிப்பா

பற்றற்ற பற்றினையும் பாங்காக பற்றிற்றே
கற்பித்தார் பற்றினையும் கலங்கமில்லா காமராசர்
சொற்கோடித் தேடினாலும் தோற்றிடுமே எம்மொழியும்!!
பொற்காலம் தந்திட்ட பொன்மனத்தை போற்றிடவே

விதியாலே கல்வியெனும் விதிசமைத்து விழிதந்தார்
அதிவிரைவாய் வளர்ச்சியினை அதிகரிக்கும் தொழிற்சாலை
உதித்ததுவே ஊரெங்கும் ஊக்குவித்த உன்னதத்தால்
மதியாலே மகிழ்வினையும் மலர்வித்த பேராற்றல்

அருந்தொண்டாய் நாட்டிற்கோ அணைதந்த தொலைநோக்கு
பெருங்கொடையாய் திகழ்கிறதே பெயர்சொல்லும் பிள்ளையென்று
விருதுநகர் விடிவெள்ளி விடியலாக வந்திங்கே
இருள்நீக்கிச் சென்றதுவே இருக்கண்ணைத் திறந்ததுவே

தன்னலத்தை தான்துறந்து தனித்துவமாய் பிறப்பெடுத்தே
என்றென்றும் வாழ்கின்றார் ஏழைகளின் பங்காளன்
நன்மைகளை நமக்காக நயந்தளித்த மேதையிவர்
நின்றிட்டார் நேர்மையினால் நிழல்பரப்பும் ஆலமென

தூசுதட்டி தமிழகத்தை தூக்கிவைத்தாய் உச்சத்தில்
காசு பணம் விரும்பாத கர்மவீரர் நீர்தானே
வீசிடுதே சாமரங்கள் வீண்மீனும் உனக்காக
ஆசுகளே இல்லாத அற்புதத்தின் நற்பிறப்பே

பாலாடை உள்ளத்தால் பாதைகளை நீவகுத்தாய்
கோலங்கள் நீபோட கோள்களுமே மாறியதே
தாலாட்டும் தாயாக தடம்காட்டும் தந்தையாக
காலத்தால் அழியாத காமராசர் வாழிவாழி



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஹைக்கூ

நெருங்கும் ஆடிப்பட்டம்
ஏர்உழவை நிறுத்தும் விவசாயி
அடைகாக்கும் குருவிக்காக.

தூறும் வானம்
வீடு திரும்பும் விவசாயியுடன்
சாக்கு அணிவித்த ஆடுகள்




கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல், சென்னை

# அள்ளித் தரும் வானம்

அள்ளித் தரும் வானம் ஓரிடமல்ல.
அங்கிங்கெனாதபடி பரவியக் கோளம்.
வளி மண்டலத்தை நிறைத்தே
ஒளி மண்டலமாய்த் திகழ

அள்ளித் தெளித்தது விண்மீன்களை.
துள்ளி ஓடும் வெண் முகில்களை
நீர் சுமக்க வைத்தே மகிழும்.
நிலமதில் உயிர்களை உருவாக்கும்.



உயிர்கட்கு அமிழ்தைத் தந்தே
பயிர்களை வளர்த்து பசி போக்கும்.
நிலமதில் கனிமங்களைச் சேர்க்கும்
உலகத்தின் கூரையாகிக் காக்கும்.

காயாம்பூ நிற வானம் அமிழ்தைத்
தராவிடில் உலகில் உயிர்களில்லை.
ஒளியின்றேல் உலகில் இருள் சூழும்.
கைம்மாறு கருதாத வானமாய் நாம்

கைம்மாறு வேண்டாது கடமையினைச்
செய்தே கருணையோடு வாழ்வோம்.
வானத்தைப் போல் அள்ளித் தரமுடியாதெனினும்
கிள்ளியாவது தருவோம்.
களிப்போடு வாழ்வோம்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# மகாராணி

மகனின்
திருமண வரவேற்பு நிகழ்வில்
ஒதுங்கி ஒதுங்கி நிற்கும்
தன் விதவைத் தாயை;
மணப்பெண்ணும் நானும்
அமர்ந்திருக்கும் நாற்காலியில்
நடுவில் அமரவைத்து
இருவரும் பக்கத்தில்
பாதுகாவலராய் நின்று
புகைப்படம் எடுத்துக் கொள்ள
அரியணையில் மகாராணியாய்
வீற்றிருக்கிறாள் தாய்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# காயம் கண்ட இதயம்

ஓரக்கண்ணால நீ ஒருதரம் பார்த்தாலே
சரங்கள் தைத்ததுபோல் சருமம் நோகுதடி
கள்ளச்சிரிப்போடு என்னை கடந்து போனாலே
உள்ளம் வேகுதடி உடலும் நோகுதடி

தென்றலடிக்கையில நீ தெருவில் போனாலே
சன்னதமாகியே காற்றென் சாளரம் உடைக்குதடி
மழையும்பொழிகையில நீ மகிழ்ந்து நனைந்தாலே
அலைகடலுமிதுவென்றே நீரென் அகத்துள் நுழையுதடி

காயமானதடி இதயம் கனத்துப் போனதடி
மாயம்நீசெய்து எனக்கு மருந்தாய் வந்திடடி
இதழில் முத்தமொன்றை இதமாய் தந்திடடி
பதமாய் காயங்களும் பறந்தே ஓடுமடி.



கவிஞர் பொன் சுரேஷ்,கழனிவாசல் பெரம்பலூர்

# அவள் முதலெழுத்தாய்

மடியில் சுமந்தெமை
மலராய்க் காத்தவள்

மாதர்களில் சிறந்தவள்
மாதென் மாதா அவள்

மின்னலாய் பல
வேடங்கள் தாங்கியவள்

மீதியைத்தான் புசித்து
நல்லதையே எமக்கூட்டியவள்

முதுமையிலும் தன்
சேய்களுக்காய் வாழ்ந்து

மூர்ச்சையாகும் வரை
தியாகங்கள் செய்தவள்

மெதுவாய் எண்ணெழுத்தோடு
நல்லறிவுரைகள் புகட்டி

மேதினியில் மெய்வருத்தி
நமக்காய் உழைத்தவள்

மையல் கொண்டதில்லை
என்றும் தன் மெய்யழகில்

மொத்தமும் குடும்பமென
தன்னாசைகளை மறந்தவள்

மோகம் கொண்டதில்லை
இப்பொய் யுலகில்

மௌனமெனும் அழகால்
உறவுகளிலவள் உயர்ந்தவள்

அஃதே அவள் அமைதியாய்
இவ்வுலகில் வாழ்ந்து மறைந்தனள்

அகர வரிசையிலும்
அவள் முதலெழுத்தாய்
மகர வரிசையிலும்
இங்கு யாவுமாய்.



கவிஞர் ஷெண்பகச் சோலையாள்,ஆய்ஷ்

# பூவுலகு

ஒவ்வொரு அம்மாவின்
ஆவியில் உருவாகும்
இட்லித்தட்டில் இருக்கும்
இட்லியை விடக் குறைவானது
குருச்சேத்திரப் போரில்
உயிர்பிழைத்தவரின் எண்ணிக்கை

ஆகையால்
இதயத்தில் உள்ள
வெண்புறாவை
சுவாசக் காற்றில் பறக்கச் செய்து
சுயமாய் வாழ்வோம்

ஏனெனில்
பூவுலகில் சமத்துவம் ஒன்றே சுகமானது



கவிஞர் ஜேபி நீக்கிழார்,சென்னை

# பொறை உடைமை

## அதிகாரம் 16

பொறுத்துக் கொள்ளும் பண்பு கொண்டோர்
பூமியைப் போல பொறுமை உடையோரே

தீமை செய்தவரை நம் ஆயுள் முடியும் வரை
பொறுத்துக் கொள்வதை விடுத்து
மறந்து விடுவதே நன்றாம்

பெரிய இன்னலே விருந்து கவனிக்க இயலாமை
இதிலும் வலிமையில் வலிமையோ
மடையரைப் பொறுத்துக் கொள்வதாம்

பொறுத்துக் கொள்வோரைப்
பொன் போல போற்றுவார் உலகத்தோர்
மற்றவர்கள் ஒரு பொருட்டல்லவே




எத்தகையத் துன்பத்தையும்
பொறுத்துப் போவோர் அறமுடையவரே

நமது தகுதியால் வென்று விடலாமே
மிகப்பெரிய துன்பம் செய்தவரையும்

பிறர் சொல்லும் இழிவானச் சொல்லை
அலட்சியம் செய்வோர்
உண்ணா நோன்பு இருக்கும்
பெரியோர்களை விட சிறந்தவரே

பொறுமையில் பூமாதேவியா இருந்து உலகை ஆள்வோம்
உள்ளதால் உயர்வோம்
உன்னத மனிதப் பிறவியாக வலம் வருவோம்

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# முத்தான வாழ்த்தொன்று தந்தேன்

அன்னை தந்தையரை அனாதையாக்காதீர்

அன்போடுஅவர்களை பார்க்காவிட்டாலும்
ஆதரவு தந்து தினம் காத்திடுங்கள்
ஆதரவுதான் ஆலமரம் ஆகும்



எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது
தந்த சுகம்தனில் நமை ஈன்று
பந்த பாசத்துடன் நம்மை வளர்த்து
சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து

பிள்ளைகளை நமது சொத்துயென வளர்த்து நினைத்து
எள்ளளவும் அவர்தம் சுயநலம் மறந்து
அள்ளியணைத்து வளர்த்த பெற்றோரை

மறவாது காத்திடுவீர் அவர்களை அரவணைத்திடுவீர்
மூத்த குடிமக்கள் தினத்திலே
நான் சிறந்ததொரு கவி எழுதி பாடவ
முத்தான வாழ்த்துகளை அவர்களுக்கு சொல்லவே

கவிஞர் அஞ்சல் தஞ்சை தாசன்

# அனுபவங்கள்

வாழ்க்கையில் கற்கும் ஒவ்வொன்றும் அனுபவமே
சிறு வயது நினைவுகள் அனுபவமே
முன்னோர் சொல் கேட்டல் அனுபவமே
கருத்து நிறைந்த பேச்சுகள் அனுபவமே
புத்தகம் படிப்பது நல்ல அனுபவமே
குழந்தைகளோடு உரையாடுவது நல்ல அனுபவமே
தேடி தேடிப் பார்ப்பது அனுபவமே
அறிவியல் உலகில் வாழ்வது அனுபவமே
இலக்கியத் துறையில் பணியாற்றுவது அனுபவமே
எழுத எழுத்துக்கள் வருவது அனுபவமே
வாழ்க்கை பாடம் கற்பது அனுபவமே
இலக்கணத்தோடும் இலக்கியத்தையும் கற்பது அனுபவமே
காற்றோடு கலந்த இசையும் அனுபவமே
இசையோடு நாம் வாழ்வதும் அனுபவமே
மானுடன் வாழ்வில் முக்கியமானது அனுபவமே
அனுபவம் இல்லா வாழ்க்கை வாழ்க்கையாகாதே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மீண்டு(ம்) வருமா?

வசந்தங்களை வரவேற்ற
வண்ண வனங்கள்
பசுமையான மரங்கள்
பச்சிளம் இலைகள்

தென்றல் காற்றின்
தெம்மாங்கு இசையின்
பிறப்பிடம் முதன்மையாக
பின்னிப் பிணைந்த

காடுகளின் கூட்டங்கள்
கானமழை தந்தனவே
நிறங்களும் மாறி
கார்மேகங்கள் களவாடியே

மனங்களின் மணமே
மயங்கியதே கோடைக்காலமாய்
கிறீச்சிடும் சிட்டுக்கள் கிழித்து நெய்த
கூடுகளில் மெத்தைகள்
காணாமற் போயினவே

இகழாதே மானிடா வள்ளுவன் வாக்கு
மரமதுகூடிட மேகம்கூடி மழை வரும்
நகரமே நரகவாழ்க்கையாகிட
மீண்டும் வருமா?

மீண்டு(ம்) வருமா
மீட்சி தருமா?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# வெருவந்த செய்யாமை

## அதிகாரம் : 57




கணக்காய் குற்றமாய்ந்து
கடிதாய் தண்டித்து.
மறுக்கால் அக்குற்றம்
மூழாதுகாப்போனே வேந்தனாம்.

குற்றத்தானுக்கு தண்டனை
கொடுமையாய் காட்டிக்கொண்டு.
கோட்டிற்குள் தண்டித்தலே
நீடிய ஆக்கந்தருமாம்.

குடிகள் அஞ்சிநடுங்கத்தகும்
கொடுங்கோல் அரசன்.
திடமான தன்கொடுமைகளால்
கெட்டழிந்து போவான்.

நம்மரசு கொடுங்கோலனென
தம்மக்களால் கூறப்படுபவன்.
அப்பழிச்சொல் கொடுமையால்
அதிவிரைவில் அழிந்துபோவான்.

கொடுங்குணமும் கடுமுகமும்
கொண்டோனின் பெருஞ்செல்வம்.
பேய்நின்று காக்கும்
புதையல் போன்றதாம்.

கடுஞ்சொல்லுடன் கொடுமனமும்
கொண்டாளும் வேந்தனின்.
பெருஞ்செல்வம் நீட்டிக்காது
தேய்ந்தொழுகிப் போகும்.

பொறுக்கவியலா கடுஞ்சொல்லும்
முறையில்லா குற்றங்கடிதலும்.
பகைவெல்லும் வலியறுக்கும்
அரமாம் வேந்தர்க்கு.

அமைச்சோடு ஆராயாது
தன்முனைப்புடன் சினத்தோடு.
செமைகொண்டாளும் வேந்தர்க்கு
செல்வங்களெல்லாம் சுருங்கிப்போம்.

போருக்குமுன் குடிகாக்கும்
முற்காப்பை செய்யாதரசன்.
தற்காப்பில்லாது அஞ்சி
விரைந்தழிந்து போவான்.

கொடுங்கோலாட்சி அரசனுக்கு
கல்லாகயவர்களை அரணாக்கும்.
அக்கோலாட்சிபோல் நிலத்தில்
எக்காலமும் சுமைவேறில்லை.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# என் கனவில் என் தேசம்




மறந்தானோ பிரம்மன்
படைப்பிலில்லை திருநங்கை
கருத்தரித்தல் மையமில்லை
தரிசனத்திற்கு கட்டணமில்லை

மாற்றுத்திறனாளி இல்லா
தினமொரு பிறப்பு
மாசுக் கலக்காத
சுத்தமானக் காற்று

சுத்திகரிப்பு செய்யாத
சத்தான குடிநீர்
மண்ணை மலடாக்காத
இயற்கை உரங்கள்

ஒட்டுக்காக சாதி வளர்க்கும்
பாவிகளில்லை
கிட்டாது போன மதிப்பெண்ணால்
மரணமில்லை

மதுக்கடைகள் மூடின
இளம் விதவையுமில்லை
அறத்தின் வழியில் அரசும் இயம்ப

வேசமும் பொய்மையும் வஞ்சகமும்
மக்களிடத்திலில்லை
மாதம் மும்மாரி
களிப்பில் விவசாயி

ராமர்பிள்ளை பலநாள் கனவும்
நிறைவேறியது
சிறைச்சாலை கம்பிகளை
சிறையெடுத்தன சிலந்திகள்

சாதிக்கொரு நீதியில்லை
காந்தியும் கைமாறவில்லை
நீதி தேவதையின் கண்களும் திறந்திருந்தன

இலவசத் திட்டங்கள் அறிந்திராத மக்கள்
ஏற்றத்தாழ்வு எல்லாரிடமும் இல்லாமல் போனது
முதியோர் இல்லங்களும் மூடிக் கிடக்கின்றன
புத்தொளியாய் புதுப்பொலிவாய் என் தேசம்

நல்ல கனவு
இன்னும்கூட தொடர்ந்திருக்கலாம்.

கவிஞர் லா.பெனிஸ்,திசையன்விளை

# இலக்கு

இலக்கில்லாமல் வாழ்க்கையோடு
இணைந்து போக வழி புலப்படாமல்
காற்றாடியாய் விண்ணில் பறந்தேன்!
உன் விழி வீச்சில்
என் இலக்கு எது எனப் புரிய வைத்தாய்!
எட்டா உயரத்தில் நீ இருக்க
உன்னை எட்டும் விதமாய்
என் பாதையை மாற்றினேன்!
வெளிச்சமாய் நீ நிறைந்தாய்!
குளிர் நிலவாய்
எனை அணைத்தாய்!
தொட்டு விடும் தூரத்தில்
நீ இருக்க!
எட்டிப் பிடிக்கும் நேரத்தில்
தொடுவானமாய்
ஆட்டம் காட்டுகிறாய்!
மழையாய் என்னுள்
இறங்கிவிடு!
இலக்கை அடைந்து
உன்னோடு பயணிக்க
உந்தி தள்ளும் விசையாய்
என்னை இயக்கிவிடு!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# இன்றைய நூற்றாண்டு

காலம் காட்சிகளாய் கண் பார்வை இழந்து
இன்று தொடர்ந்தது ; தொடர்கிறது
தொடர்ந்து கொண்டிருக்கிறது ; தொடரும்.



கலை இழந்து ஐம்பூதங்களும்
அடுத்த தலைமுறைக்கு சொந்தமில்லாமல்.
நிரந்தரம் இல்லா நிலைப்பாட்டில்
நிறையும் குறையும் யாராலும்

கடந்த நூற்றாண்டும்
கடந்து கொண்டிருக்கும் நூற்றாண்டு
கடக்க போகும் நூற்றாண்டும்.

மூச்சுக்கும் பேச்சிக்கும் சுவாசம் இல்லாமல்
சுவடுகளின் தடங்கள் இல்லாமல் வரலாறு இழந்து
யார் யாரால் எதற்கு யாருக்கு
ஆயிரம் ஆயிரம் கேள்விகள்
பல்லாயிரம் விடைகள்.

நீதியுடன் போட்டி போட்டு
போர்க்களம் ஒன்றே
தினம் தினம் நாட்டில் நாடக மேடையாக.
நான் நானாக அல்ல
மறந்த நொடியில் மனித தன்மை இழந்து.
ஏதோ ஒரு வினையில் விஞ்ஞான
நிலையில் நாடும் ஏடும்
மக்களின் பாகுபாட்டில்.

நாடகம் ஏற்றுதே தினம் தினம்
அழிவுக்கும் ஆசைக்கும்
ஆட்சிக்கும் அந்தரங்கத்திற்கும்
ஆளுமை ஆளுக்கொன்று
கட்சியும் பேச்சுக்கு ஒன்று
எல்லையும் நாட்டுக்கு ஒன்று
அழிக்கும் அறனும் நாட்டில் உண்டு

காலம் இரட்டைக்கிளவி போல் ஏற்ற இறக்கத்துடன்
பறந்து கொண்டுதான் இருக்கிறது.
பாவப்பட்ட மனிதர்களுடன்
பாகுபடுத்திக் கொண்டிருக்கும்
மனிதர்களுடன் எப்படி பாகுபட்டது?
பிரளயம் தவிர அனைத்தும்
மனிதனால் உருவாக்கப்பட்டது தானே
தன் அறிவால்.

சொந்தம் கொள்ளும் ஒவ்வொன்றும்
உரிமை இல்லா நிபந்தனை அறியாமல் நிபுணர்கள்
மரணிப்பதை மறந்து விட்டாயா மனிதா?

நீ இருக்கும் வரை மட்டும்தான்
அனைத்தும் உன் கண் பார்வைக்கு
காலம் சொல்ல மறக்கும் நீ செய்தவருக்கும்.

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# நட்பு

நாம் தவறு செய்யும் போது
ஊக்கப்படுத்துவது
உண்மையான நட்பன்று
வாழ்வில்
தவறிடும் போது
சுட்டிக் காட்டுவதே நட்பு




அன்பான நண்பனை
ஆபத்தில் அறியலாம்
ஆபத்திலும் நம்மை கைவிடாது
கூட நின்று காப்பவனே
உண்மையான நண்பன்

உண்மையான நட்பென்பது
சிரித்து பேசுவது அன்று
உளமார நெஞ்சத்தில் தோன்றுவதே
உண்மையான நட்பு

நம் நண்பனை வைத்து
நாம் யார் என்று கூறிவிடலாம்
நல்ல நண்பனே — நம்
நல்வாழ்வின் ஏற்படுத்துவது நண்பன்

அன்னையின் அன்பும்
தந்தையின் கண்டிப்புக்களும்
ஒன்றாக அமைந்த ஒரு உறவு
அனைத்தும் பொருந்திய நட்பு

தனிமை நம்மை நெருங்கிடாது
துன்பம் நம்மை தொடர்ந்திடாது
மனதில் எங்கும் நிறைந்திடும்
மகத்தான உறவுவே நட்பு

நம் சந்தோசத்தின் மறு வடிவமாய்
நாம் மகிழும் போது மகிழ்ந்து
அழும் போது அரவணைத்துக்கொள்ளும்
ஒரு அக்கறையான சொந்தம் நட்பு

அளவோடு பழகுவது நட்பல்ல
அதிக உரிமையோடு பழகுவதே நட்பு
ஆபத்து நேரத்திலும் அருகிலிருந்து
அறிவுரை சொல்பவனே சிறந்த நண்பன்

தவறு செய்யும் போது
தட்டிக் கேட்டு
தளர்ந்து சோர்ந்த போதும்
தட்டிக் கொடுத்து
ஆலோசகனாய் ஆசானாய்
அனைத்துமாய் இருப்பவனே
உண்மையான நண்பன்

கவிஞர் ஜான்சி,கொச்சின்

# சிலப்பதிகாரம் (ஆறு)

6. கடல் ஆடு காதை .

1. வித்தியாதரன் காதலியுடன் புகார் வருகை :
கயிலாய மலையில் சேடி நகரில் வாழ்பவன் வித்தியாதரன்
மயிலான தன் காதலியோடு இந்திர விழா காண வந்தான்
ஒயிலாக வந்தவளோடு சதுக்கத்துப் பூதத்தை வழிபட்டான்
குயிலாகப் பாடி ஆடும் அழகி மாதவியின் கதை கூறினான்.

இந்திரலோகத்தில் நாரதர் வருகை ஊர்வசி நடனம்.
அந்த இந்திரன் மகனை நினைத்து மனம் உருகி ஆடினாள்
தந்திரமான அவள் செயலை கண்டித்து சபித்தான் இந்திரன்
அந்தரத்தில் ஆடியவள் பூலோகத்தில் மாதவியாகப் பிறந்தாள்



2. வித்தியாதரன் மாதவி ஆடல் பற்றி காதலியுடன் கூறுதல் :
உமையவளை பாகமாகக் கொண்டு சிவன் ஆடியது கொடுகொட்டி
இமையவன் நேர்த்தியாக பாரதி வடிவில் ஆடியது பாண்டரங்கம்
தீமைகளை ஒழிக்க கம்ச வதம் செய்து முருகன் ஆடியது துடிக் கூத்து
பகையை வெல்ல நகர்ப்புறங்களில் ஆடியது குடக்கூத்து ஆகும்

மன்மதன் ஆண்மை துறந்து பெண்ணாக ஆடியது .பேடிக் கூத்து
வன்பகை அசுரவதம் செய்ய துர்கை ஆடியது மரக்கால் கூத்து
அன்று திருமகள் கொல்லிப்பாவையாக ஆடியது பாவக் கூத்து
இன்னும் பலவகை ஆடல்களை விழா வீதிகளில் மாதவி ஆடினாள்

3. கோவலனும் மாதவியும் ஊடியும் கூடியும் மகிழ்தல் :
மாதவி விழா மக்களை மகிழ்விக்க அரங்கில் ஆடி வந்தாள்
மாதவன் கோவலன் அவள் மையலில் மனம் நொடிந்தான்
காதலன் மனதைப் படித்த காதலி அவன் ஊடலை களைந்தாள்
காதலி ஆட்டம் பாட்டம் மனம் மகிழ்ந்து ஊடலை மறந்தான்

தன் கூந்தலில் நறுமணம் கமழும் நெய்யிட்டு அகிற்புகை கூட்டினாள்
முன் நெற்றியில் மணிகள் மின்ன கண்களில் மை இட்டு காந்தமானாள்
மின்னும் சரடு, சரப்பள்ளி, கழுத்தில், மரகத வளையல் கைகளில்
இன்ப வாசலில் அவள் உள்நுழைய ஊடல் மறந்து கூடலானான் அவன்.

4. கோவலனும் மாதவியும் கடற்கரை செல்லுதல் :
மங்கள விழா முடிந்து மக்கள் நீராட கடலுக்குச் சென்றார்கள்
தங்கள் பொருட்களுடன் பன்னாட்டு வணிகர்கள் கடற்கரையில்
அங்கமெல்லாம் ஆபரணங்கள் மின்ன மூடுவண்டியில் மாதவி
தங்கமகன் கோவலன் கோவேறு கழுதையின் மீது வந்தான்

5. கடற்கரையில் காதலர்கள் :
சிற்றுண்டி, பிட்டு, பணியாரங்கள் விற்கும் கடை விளக்குகள்
ஏற்றிவைத்து விடியும்வரை வரிசையாக குடத்தண்டு விளக்குகள்
சுற்றிவரும் மரக்கலங்கள் வழிநடத்தும் கலங்கரை விளக்கு
அற்றைநாள் மீன் பிடிக்கும் படகுகளில் ஒளி சிந்தும் விளக்குகள்

ஏராளமான விளக்குகள் வெளிச்சத்தில் மணல் பரப்பு பளிச்சிட
தாராளமான மணல் பரப்பு மாவுபோல் வெண்மையாக காட்சிதர
வாராது வந்த மாதவி கடற்கரையில் தோழிகளுடன் விளையாட
பாராமுகமாக தோழி வசந்தமாலை யாழினை வாங்கி மீட்டினாள்
தீராத காதலில் பின்னால் வந்த கோவலன் அவள் கை பிடித்தான் .
மாராப்பு சீலையில் முகம் புதைத்து மயங்கினான் விடியும் வரை

(தொடரும்)

கவிஞர் ந.திருக்காமு

# அய்யனார் ஈடாடி கவிதைகள்

மீசை வைத்த
மெல்லிய வெளிர்நிற
பூங்குஞ்சு மீன்கள்
முண்டியெழும்புகிற
வெங்காயத் தாமரைகளுக்கிடையில்
வெளுத்து காய்கிறது
ஒருநாள் திருவிழாவில்
கழற்றி வீசப்பட்ட
செந்நிற ஆடைகளும்
மழித்து வீசப்பட்ட
மயிர்க்காம்புகளும்.

***

கனத்துப் பெய்யும்
பெருமழையின் போதெல்லாம்
மனதை அலைக்கழிக்கும்
தகரக்கொட்டறை வீட்டில்
மரக்கட்டிலுக்கடியில்
பதுங்கும் பூனையென
கோணிச் சாக்குகளை
இழுத்துப் போர்த்திய
கதகதப்பின் நினைவுகள்
இப்போது
உச்சித் தூற்றல்
கொடிப்பிச்சியருகே
பின்னிக்கொண்டு வருகிறது
தலவாசலை நுகரும் போதும்.



முடி திரிந்த தலையுடன்
அப்பிக்கொண்ட படிந்த அழுக்குடன்
வடிந்த நீள் மூக்குடன்
கைகளை ஏந்தும்
சிறுமி ஒருபக்கம்

உடலின் அதிர்வுகள்
தோலில் வெடிக்க
தாடை நடுக்கத்துடன்
மூத்திரக் கொச்சையோடு
கைகளை ஏந்தும்
முடி நரைத்த
மூதாட்டி ஒருபக்கம்

இருவருக்குமிடையே
ச்சீ என்று கீச்சிட்டு
கடந்து போகும்
மாம்பழ நிறப் பெண்ணிடம்
தோற்கிறது மனிதம்
பேருந்து நிறுத்தத்தின்
நுழை வாயிலில்.

கவிஞர் அய்யனார் ஈடாடி

# வேண்டும்

சமயக் கலப்பில்லாத
அறங்கள் வேண்டும்.
சாதிகள் இல்லாத
சமுதாயம் வேண்டும்.



வேதிக் கலப்பில்லாத
வேளாண் வேண்டும்
ஆதிமனிதனாக அறத்துடன்
வாழவேண்டும்.

காலார காலையில்
நடந்திட வேண்டும்.
கடந்து செல்லும் காலத்தை
சற்றே நிறுத்திட வேண்டும்.

இதயம் மகிழ இனியது
செய்திடல் வேண்டும்
இறுக்கத்தைக் கொஞ்சம்
குறைத்திட வேண்டும்.



காசில்லாத கல்வி
வேண்டும்.
வீசுதென்றலுடன்
விளையாடிட வேண்டும்.

பொறாமையில்லா
சிந்தை வேண்டும்..
பொறுத்துக் கொள்ளும்
மனமும் வேண்டும்.

குறை சொல்லாத
குணமும் வேண்டும்..
மறைகளில் கூறியபடி
மாண்புடன் வாழ வேண்டும்.

கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன்,கோவை மாவட்டம்

# நாஞ்சில் நாடு "ஹைக்கூ"

## கிழவி

திங்கள் சந்தையில்
திண்ண சோறு தந்தாள்
தண்டட்டி கிழவி!
***



## வறட்சி

உச்சி வெயில் வானை
பார்க்கும் உழவன்
காய்ந்த நிலம்!
****

## பருவ மாற்றம்:

கரிநெய் சாலையில்
பாதம் கொப்பளித்தது
ஆடி மாதத்தில்!
****



## ஆணவ சாம்பல்

முறுக்கெறிய உடலை கட்டையில்
அடித்தான் வெட்டியான்
பண்ணையார் சாம்பல்!

கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# மௌனம் பேசியதே

ஊடலினால் வந்த சினம்
நாற்சுவருக்குள்
ஊமை நாடகங்கள்

செக்கனில் மாறும் உணர்வுகள்
அதை காட்டிக் கொடுக்கும்
இரு விழிகள்



இதழோரம் பூக்கும்
மென்நகையை மறைக்கும்
குறும்பு மீசை

சிகையை சரி செய்யும்
தோரணையில்
கண்ணாடி முன்
கள்ளப்பார்வைகள்

’நீ பேசாதே’
எனும் பொய்க்கோபம்

’நான் பேச மாட்டேன்’
என்றே பேசும்
சிறு பிள்ளைத்தனம்

கன்னம் கிள்ள
நினைக்கும் அடம்

ஆறடி மழலையின்
அடங்கா சேட்டைகள்

அப்பப்பா என்ன அழகு!

என்னவனே
உன் கோபத்தின்
எல்லை
இவ்வளவு தானோ!

நான் ’பேசவில்லை’
நீயும் ’பேசாதே’

உன் மௌனம்
பேசும் கவிதைகளை
நான் மொழிபெயர்த்துக்
கொள்கின்றேன்.

கவிஞர் பாதிமா நஸ்மியா,கொடியாகும்புரை

# ஆசிரியை

பல முறை கண்டித்தும்
எதையும் பொருட்படுத்தாது
கண்ணாமூச்சி
விளையாட்டாய்
அடிக்கடி காணாமல் போய்
ஒளிந்து கொள்ளும் பொம்மைகளை
கையில் பிரம்போடு
பயமுறுத்துகிறாள்

எதையும் காதில் வாங்காமல்
ஆரவாரம் செய்யும்
சிறு பிள்ளைகளைப்போல் இல்லாது
அமைதியாகவேயிருக்கும் அவைகளிடம்
சைலண்ட் ப்ளீஸ் என்ற
வார்த்தையை உச்சரித்து
கொஞ்ச நேரம் ஆசிரியையாகுகிறாள்
பள்ளிச்சீருடை கலையாத சிறுமி.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# எனக்குள் நீ!

சிறு மெல்லிய காற்று
வீசுகிறது தூரத்தில்
அது சுமந்து கொண்டிருக்கும்
உனது பெயர் கேட்கிறது
எனது காதுகளில்
உன்னை பார்த்தபடியே இருந்திடதோணும்
எனது இரு விழிகளுக்கும்
ஏமாற்றம் மட்டுமே
மீதமாய் உள்ளது
உன்னுடன் பேச ஏங்கும்
என் வார்த்தைகள் எல்லாம்
ஊமையாக ஊனமுற்று
நெஞ்சோரமாய் ஒதுங்கி விட்டது
தினமும் உனக்காக துடிக்கும்
என் இதயத்தின் ஆயிளும்
உன் வருகைக்கு காத்திருக்கும்
என் உடல் கூடும்
நீ வந்து சேரும் வரை
உன் நினைவுகளில் இருந்து மீளாது



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# அலங்காரம் என்பது

அலங்காரம் என்பது
பிடித்துப்போய் செய்வது
அளவற்ற அன்பில் நெய்வது
பன்னீர் தெளிக்கும்
நேச உச்சாடனத்தில் யாகம் செய்வது.
கண்ணீர் தராத
உண்மை இணைப்பால் உண்டாவது
அது எல்லோருக்கும் கிடைப்பதில்லை
கிடைப்பவர்களுக்கு அது புரிவதில்லை
அது எல்லோராலும் முடிவதில்லை
முடியும் பொழுதுகள் மிளிர்வதில்லை
வெறும் அலங்காரங்கள் போலியானவை
பிடித்தமான(வர்க்கான) அலங்காரங்கள்
நேசத்துளிர்களால் வேயப்பட்டவை
உயிர்மரமாய் உணர்வில் உரசுபவை
அன்பின் பாசிமாணிகளால் கோர்க்கப்பட்டவை
அவ் அலங்காரங்கள் வெதுவெதுப்பான நீரில்
விரல்களை வைப்பது போன்றது
ஆதலால்
பிடித்தமானவர்களின் அலங்காரங்களைக்
கொஞ்சம் கொண்டாடித்தான் பாருங்களேன்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# கனாக்களின் பின்னே

தன்னிறைவின் தலைமகனாய் தேசம் நிமிர
தனக்கான கடமையை குடிமகன் உணர
மதுவில் மூழ்கி மயக்கத்தில் கிடக்கும்
வருங்காலத் தூண்களை திசை மாற்றிட
அதிகார போதையில் ஆணவம் தலைதூக்காதிருக்க
உழவின் பசுமையில் உலகம் தலைதூக்க
இயற்கையின் அரவணைப்பில் சூரியன் இளைப்பாற
சமத்துவக் காற்றில் சமூகம் மூச்சுவிட
வன்கொடுமை குழிகளுக்குள் பெண்மை வீழாதிருக்க
வன்முறை களத்தில் பிஞ்சுகள் கசங்காதிருக்க
பண்பாட்டின் வேர்களை படரவிடும் மனமிருக்க
மொழியின் ஆளுமையை உள்வாங்கும் தலைமுறையாகிட
திரையின் பிம்பத்தில் தன்னைத் தொலைக்காதிருக்க
அறிவின் தளத்தில் வரலாற்றை உணர
அழிவின் விளிம்பில் நுழையும் கலைகளை
தளிர்க்கச் செய்யும் ஆசையென விளையும்
எல்லாக் கனவுகளும் ஈடேறும் சிறப்பெனவே.



கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# அனுபவங்கள்

சிறுவயதில் நடத்தலில் கற்பாய் எழ
சிறுமையால் சீர் திருத்தம் பெறுவாய்
சிறு தவறுகளால் ஆளுமை ஆகுவாய்
சிந்தித்து நடக்க கற்றுக் கொள்வாய்

பள்ளியில் விடும் சிறு தவறுகளால்
பற்பல பாடம் கற்றிடுவாய்
படித்ததால் பெறுவாய் பெரிய பட்டம்
படித்து துறைகளில் தலைநிமிர்ந்து நிற்பாய்

ஆயிரம் உதவி பிறருக்குச் செய்வாய்
ஆயிரத்தில் ஒன்று தப்பாகி விட்டால்
ஆயிரத்தையும் மறந்து குறைசொல்லும் உறவுகள்
ஆயுள் உள்ளவரை பாடமாக மாறும்

அன்பை வாரி வழங்கி இருக்கையில்
அது உண்மையென நம்பி உண்மையாக இருக்கவே
அவர்கள் தேவை முடிந்த பின்பே
அடித்து துறத்தும் கூட்டத்தால் பாடம்பெறுவாய்

நம்பிக்கையோடு நண்பியிடம் நம்பி சொன்னது
நல்ல விதமாய் கேட்டு விட்டு
நடித்து நாலுபேரிடம் சொல்லிவிடுவர்
நன்றாய் கற்பாய் பாடம் இதிலே



துரோகம் தரும் பாடம் இங்கே
துன்பத்தோடு மன வலிமை பெற்று
துள்ளி எழ சொல்லித் தரும்
துவண்டிடாதிருக்க வலிகள் தரும் அனுபவம்

கவிஞர் ஜஸூரா ஜலீல்

# புதிர்கள்

காலம் போடும்
கணக்குகளைத்
தீர்க்க முயலாதீர்கள்
புரிந்து கொள்ளுங்கள்
விடைகளை
நீங்கள்
அறியும் போது
புதிர்கள்
மாறியிருக்கும்.



கவிஞர் கீர்த்தனா பு

# கவிதைகள் அரங்கேற்றம்

மனதில் உதிப்பது கவிதை
மலரும் நினைவுகள் கவிதை
எண்ணத்தில் வருவது கவிதை
ஏட்டில் விதைப்பது கவிதை
ரசணையில் விளைவது கவிதை
ரகசியங்கள் கசிவது கவிதை
கற்பனையில் தோன்றுவது கவிதை
காட்சிகளை வர்ணிப்பது கவிதை
உணர்வில் கலந்தது கவிதை
உள்ளத்தில் நிறைவது கவிதை
கவலைகள் மறைப்பது கவிதை
கண்ணீரை துடைப்பது கவிதை
இரவின் நிலவில் வளர்வது கவிதை
இமைமூடா இரவில் ஆறுதல் கவிதை
மனதை வருடுவது கவிதை
மௌனத்தில் விளைவது கவிதை
கனவுகள் சுமக்கும் மனதில்
காயங்கள் தீர்க்கும் மருந்து கவிதை
தனிமையில் உதிப்பது கவிதை
மனதை ஆற்றுப்படுத்தும் அமைதி கவிதை
இயற்கையின் அழகில்
இதமாய் வருவது கவிதை
கவிஞனின் பார்வையில்
அரங்கேறும் அற்புதம் கவிதை
களிப்பவர் மனதில் மலரும் கவிதை
அவரவர் எண்ணம் போல்
அழகாய் பிறக்கும் கவிதை.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# கடலின் மீதான கரையின் காதல்

என் மீது கோபம் கொண்டு
சென்ற என்னவன்.

மென்மையாய் என்னை தீண்டி
செல்கிறான் மறுநொடியே.

தன்னவனை காண எத்தனையோ மங்கைகள்
என்னிடத்தில் ஏங்கி நின்ற போதும்.

அவன் ஒருநொடி கூட
என்னை ஏங்க வைத்ததில்லை.

ஒவ்வொரு முறை அவன் என்னை
தீண்டி செல்லும் போதும்

அவனுள் நான் கரைந்து தான்
போகின்றேன்.

அத்தனை காதலோடு
என்னை முத்தமிட்டுச் செல்லும்

என்னவனை எந்நிலையிலும்
தாங்க என்றும் நானிருப்பேன்.

அவனிற்கு குறையாத அவன் மீதான
அளவில்லா என் காதலோடு.

கரையாகிய நானும் கடலாகிய
அவனும் என்றும் இணைந்திருப்போம்.

கடலின் மீதான கரையின் காதல்.



கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# கொள்ளை அழகு



விழியசைய மறுத்து
வழக்காடியது
விரல்கள் எழும்பவே
அடம்பிடித்த தருணம்
தடங்கள் பேசாத தடம்
பிளறவே இல்லையே

வானுரயர்ந்த சோலைக்குள்
வாசம் கோர்த்தன
தென்றல்

அவளின் நடனம்
சுதி தப்பாத ஜதியில்
மோகம் முற்றிப் போகுது
எழிலினியின் பேரன்பின்
பேரழகில்

சந்தன மரமோ
பட்டை ஒட்டிய கர்வத்தில்
நான் அரசாங்கத்தின்
உடைமையுமென

தொடாதே தொடாதே
அபராதம் கேட்பேன் என்றது
பணக்காரன் அவன்
சந்தன மரம்

சலசல சலசல
காதிலே ராகமிசைக்குது
விடாத அருவிமகள்

தூரத்து தொடரியிவள்
இவளும் பெண்ணாகி
போனதாள்
குறைவில்லாத பேச்சிலே
சலிக்காத ஆலோலம்

அகவை பின்னோக்கிய
பயணத்தில்
இளமை சூடிய மனம்

தொடரும் கவிதை
பத்தாதே பக்கங்கள்
களவாடியது கற்பனையற்ற
நிஜத்திலே
திணறியது திட்டமே
இயற்கை இவளிடம்
முற்றும் என்பதேது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# நிலாவே வா

நிலவைப் பார்த்துச்
சோறுண்ட அன்றைய
சிறு மாதர்
இன்று நிலவுக்கே
தம் பிள்ளைகளை
அழைத்துச் செல்வர்
சோறூட்ட!



***

நிலாப் பாட்டியும்
தான் காணாமல்
போன கதையைச்
சொல்ல மண்ணுக்கு
வருகிறார் விக்ரமில்!

***

தூங்காத நிலவைப்
படமெடுக்கத் துணிந்து
தென் துருவத்தில்
தடம் பதித்ததோ;
சூரியனாரின் ஆற்றலை
மட்டும் தன் துணையாய்
அழைத்துக் கொண்டு!

புவிக்குத் துணையாய்
நானும் இனி
மக்களைச்
சுமந்திடுவேன்
என்று வாக்களித்து
விடுவாளா
நிலா மகள்?

கவிஞர் மலர் அபி

# மனக் காகிதம்

அன்னத் தூது
அருந்தவக் காதலிக்கு
சங்க காலம் கூறும்
காதல் காவியம்

காகமும்
தூதாகிப் போகும்
கலிகால காதலில்.
பறக்கும் மனமும்
காகிதமாகிப் போகும்

பறத்தலின் இயல்பு
அலையும் மனமொத்து
தன்மை பெறின்.

வாழ்தலின் பொருட்டு
தரைமீது நில்லாது
பறந்தோடும் காலம்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கஸல் பார்வை



பயந்த அதிர்ச்சி போல்
பெரும் அதிர்ச்சி ஆக்கிப்போனாள்
என்னுள்.

எச்சில் வைத்து தீர்த்துக்கொள்ள
இது கல்பட்ட அடியல்ல
சொல்பட்ட அடி.

ஊக்குவிற்பவன் கண்ணில் பார்த்த
பரிதாபம் கூட அவளில் இல்லை
ஒப்புக்கு சொல்லிக்கொள்வது
அவளுக்கு பழகிப்போன ஒன்று.

மருதாணிக் கறைப்போல்
ஒட்டிக்கொண்ட ஞாபகங்களை
எதை கொண்டு நான் அழிப்பது?

கூந்தல் மலர்கள் தவறியும் விழாது
எனும் அவள்
நம்பிக்கை கூட
என்னை நினைக்க வைக்கவில்லை.

தேரிழுக்கும் உழைப்புபோல்
நான் எனை இழுத்து போகிறேன்.
அவள் அடிக்கடி என்மேல்
தூக்கியெறிந்த பார்வைகளை
நானும் தூக்கி எறித்துவிட்டேன்.

கஸல் பார்வைகளின்
விரிவாக்க உரையை படிக்க
இல்லாமல் போனது
என்பது மட்டுமே
இப்போதைக்கு என் வருத்தம்.

கவிஞர் கோ.டோன்குமார்

# இதயக்குழி

உன்
புருவ முடிச்சு மத்தியில்
வினாக்களுக்குள்
சுருண்டு கிடக்கும்
உயிர் துடிப்பு



உடல் விட்டு
பிரியுமாவென
உயிர் தொட்டு நீ
சொன்ன வார்த்தை
உள்ளத்தில் உருளுதடி



உங்களோடு
வரும்போது
உலகம் பார்க்கிறேன்
என்றவளின்
இதயக்குழியில்
இதமாய் ஒரு முத்தமிட
ஆசையடி!

அவளுடன் நான்

கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை

# பாதை

காட்சிகள் மாறும்
தோற்றப் பிழையில்
புரியாத பயணம்
பலரின் பாதை

வழிந்திடும் நீருக்கு
வழிவிடா இமையாய்
பிறர் நலம் பேணும்
அறவழிப்பாதை

தூரத்தில் தெரியும்
துகள்களின் நெருக்கத்தில்
இலக்கின் கவனம்
ஒழுக்கத்தின் பாதை

தன்னை தானே
உருக்கிக்கொண்டு
ஒளி தரும் மெழுகு
உண்மையின் பாதை

உலகே பரிசானாலும்
மாறா இயல்போடு
நேர்மை கொள்வது
சுயமரியாதை பாதை

பாதை தேர்ந்தெடுத்து
பயணம் கொள்வோம்
சரித்திரம் படைக்க
சாதனை செய்வோம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# அம்புலிப் பருவம்

அம்புலி மாமா, அம்புலி மாமா,
அன்றைக்குப் பிள்ளைத்தமிழ்ப் பாடியவருமைக் கவிஞர்கள்
அம்புலிப் பருவம் வைத்துப் பாடினார்கள்;
அம்புலி நீயுமெந்தன் தலைவன் தலைவியோடு
அன்றாடம் வந்து விளையாட வேண்டி!

அம்புலியே உன்னை வேண்டியும் மிரட்டியும்
அளவற்ற பொருளைத் தானமாய்த் தருவதாய்
சாமதான பேததண்ட மெல்லாம் சொல்லி
சந்திரனுன்னை விளையாட வருமாறு அவர்கள்
பாடிய பாட்டு வெறுங்கற்பனை என்று
பாமரன் போல நானும் கருதியதுண்டு!

பாரதம் உன்னைப் பார்த்து வாவென
சந்திராயன் ஒன்றிரண்டு மூன்றென உன்னிடமனுப்ப
சத்தமின்றி ஒன்றை நீயும் சந்தித்து
சருக்கலை இரண்டிற்கு நீயும் தந்ததால்
சிரிப்பை மறந்து கடுமையாய் உழைத்து
சந்திராயன் மூன்றை நாங்களும் அனுப்பிட
சண்டை வந்தால்தோல்வி வருமென அஞ்சி
உந்தன்தென்துரு வத்தில்சந்திரா யன்மூன்றின் விக்ரமை
உவப்பு எமக்களிக்க கால்பதிக்க அனுமதித்தாயோ?



சந்திராயன் மூன்றும் சந்திராயன் இரண்டும்
சந்தித்துக் கொண்டதால் சந்திரனே உன்னை
சந்திராயன் மூன்று துள்ளியமாய்க் கணக்கிட்டது!
சந்திராயன் மூன்றின் செல்லக்குழந்தை பிரக்யான்
சந்திரனே உந்தன்மீது எந்தன் சிங்கச்சின்னத்தைப்
பொறித்ததை யெண்ணி நாங்கள் பூரிப்படைந்தோம்!

பாதுகாத்திடு உன்னிடம் வந்தபூமியின் விருந்தாளியை,
இல்லையெனில் பாரதமினி எம்மை அனுப்பும்போது
இந்துவே சிறிதும் இரக்கமின்றி நாங்களுன்னை
இடித்துதைத்து நையப்புடைப்போ மெனஎச்சரிக்கை செய்கிறேன்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# ஸ்ரீ மணி

என் இதய விளிம்பிள் நுழைய மறுக்கிறாய்
என்னவளே
என் இதயம் சதையால் ஆனது அல்ல
என் இதயம் உன்னால் ஆனது
அதை நீ வழிநடத்து
பிரியாதே பிரிந்து நிற்காதே
ஆண்டவனின் வரம்
ஸ்ரீ லேகாவின் குணம்
அது என்னிடம் மட்டுமே
பிரிந்து விடாதே என் குணமே
திரிந்து விடும் என் இதயமே
நான் இல்லறம் கண்டு நற்குணம் கொண்டவன்
நீ என்னை மேன்மையடையச் செய்பவள்
நற்காதல் கள் காதல்
என்னொன்றுமில்லை
காதல் காதல் தானே
வதுகையே வன்மையுடன் நான் வாழவில்லை
மென்மையோடு உன்னோடும் வாழ விரும்புபவன்
உன்னில் என்னை தொலைத்தேன் முழுவதுமாக
உனக்கு கலங்கம் வர நான் விடுவேனா
கலக்கம் கொள்ளாதே
கணவனாய் நான் இல்லாமல் இருக்கலாம்
கரை தேற்றுபவனாக நான் இருப்பேன்
என்னுடன் நீ இரு
என் இதயமாக
உண்மையாக உயிராக
என் வதுகையாக



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# சுதந்திரம்

எவ்வளவு சுதந்திரமாக பறக்கின்றன
ஆங்காங்கே மூவர்ணக்கொடி.

சுதந்திரம் கொடிக்கு மட்டும் தானோ?
இல்லை இல்லை.
பெண்மை களவாடும் அசுரனுக்கும் சுதந்திரம்தான்?

மழலை என்றும் பாராது கடத்தி
இலயித்து துன்புறுத்தும்
கொலை கும்பலுக்கும் சுதந்திரம் தான்.

அரசியலில் அலுவலகத்தில்
மருத்துவத்தில் பள்ளிகளில் என
கொஞ்சம் கொஞ்சமாக குருதி பருகிட
சுதந்திர தினதத்தில் மூவர்ணக்கொடி
புகட்டி அசுரருக்கே பாராட்டு வேறு.



எத்தனை காலம் கடந்தினும்
சாதி மத வேறுபாடு பார்க்கும் விழிகளுக்கு
மனிதம் புரியா.

மனித இனத்திலேயே பிறப்பெடுத்து
மனிதத்தையே மதஅடிப்படையில்
இழிவு உண்டாக்குவோரிடம் சுதந்திரம்
என்ற நம்பிக்கையில் வாழும் மனிதம்

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# அவள் என்றாலே கொண்டாட்டம்தான்

உந்தன் உதடுகளில்
ஓராயிரம் வார்த்தைகள் குவிந்து கிடக்கின்றன.
அவைகளை மெல்ல திறந்து கொட்டி விடு.
இங்கே பல கவிஞன்கள் கிறுக்கனாய் அலைவதற்குள்ளே.
உந்தன் புன்னகையிலும் கருவிழிகள் தான்.
உந்தன் கோபத்திலும் கருவிழிகள் தான்.
உந்தன் அசைவிலும் கருவிழிகள் தான்.
உந்தன் அச்சத்திலும் கருவிழிகள் தான்.
இப்படி எல்லாவற்றிலும் முதன்மையாய் அமர்ந்தது
அந்த கருவிழிகள் ரெண்டும்.
அந்த கருவிழிகளுக்கும்
திருஷ்டி கழித்திட சிறு பொட்டும்.
இவை இரண்டுக்கும் இடையில்
சிதறி தெறிக்கின்ற ஒளியாய் உந்தன் மூக்குத்தியும்.
உந்தன் சங்கு கழுத்து குழிக்குள்ளே
சிறு கடல் முத்துகளை வைத்துக் கொள்.
உன்னோடு தஞ்சம் அடைந்திட
நெஞ்சம் தவித்து கிடக்கின்றன.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# யாரையும் நம்பாதே

யாரையும் நம்பாதே
யதார்த்த வாதிகள்
பாரையே நம்பிடவைக்க
பழகியே கழுத்தறுப்பர்

அகத்தில் அறமில்லா
அப்பற்ற அழுக்கு
முகத்தில் பூவான
புன்னகைப் பூரிப்பு



வேசத்தை உள்வைத்து
வெளித்தோற்றம் பசுவாக
பாசமில்லாத பண்பற்ற
பச்சோந்தி மானுடம்

பாதாளத்தில் தள்ளி
பரவசம் காண்பர்
வேதாளமாய் வெந்திடும்
வேலைகள் செய்திடுவர்

குள்ளநரிப் புத்தி
குறையான குணம்
வள்ளளாகக் காட்டிடும்
வஞ்சக நெஞ்சங்கள்



பேச்சில் பலாச்சுளை
பெருநெருப்பு உள்ளகச்சாலை
இச்சையில்லா இரக்கமற்ற
இழிவான கள்ளர்கள்

கவிஞர் தமிழ் நதி கிருஷ் அபி

# தா(சே)ய்மை

ஆறுபுள்ள பெத்தவளுக்கு
ஆறுதலுக்கு யாருமில்ல

பாசத்தோட வளர்த்தவளின்
பக்கத்தில யாருமில்ல

நோய் என்று படுத்தாலும்
நலம் கேட்க ஆளில்ல

வாய் திறந்து பேசிவிட
வாரிசுகள் வாரதில்ல

மூன்று வேள உணவூட்ட
மூதாட்டிக்கு யாருமில்ல

தனிமையில் தவிப்புக்கு
துணையாக யாருமில்ல

மாத்திரையை கையில் கொடுக்க
மக்களெவரும் இங்கில்ல

நித்திரை கொள்வதற்கு
புத்திரர்கள் பக்கமில்ல

காசுபணம் பெரிசென்று
காததூதூரம் போன புள்ள

திரும்பி வரும் நேரம்
தாயவளும் மண்ணுக்குள்ள.



கவிஞர் மக்கொனையூராள்

# விழியில் மழை

கார்மேகமாய் வந்தாய்
கரு விழியில் வீழ்ந்தாய்
கார்மேகமானது
மழையைத்தருவதுபோல
கருவிழியும் மழையைத் தந்தது
கண்ணீராக.



கவிஞர் க குமார்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# சந்திரயான் 3 - இந்தியாவின் சாதனை!

சந்திர மண்டலத்தைக் கண்டு தெளிந்திடல்
இந்தியாவின் விழைவு! நீண்டநாள் கனவு!
சந்திரயான் திட்டம் அதன் தெரிவு!
நான்காவது நாடாக சந்திரனில் கால்பதித்தோம்!
தென்துருவத்தில் முதன் முதலாய்த் தடம்பதித்த
இந்தியாவைக் கண்டு வியக்கிறதே அகிலமுமே!
சந்திரயான் ஒன்றாலே நிலவில் நீருண்டு
என்றறிந்தோம்! வல்லரசுகளின் கவனத்தை ஈர்த்தோமே!
சந்திரயான் இரண்டு நிலவில் தடம்பதிக்க
இன்னும் சிலமணித்துளிதான் எனும்நிலையில் தோல்வி!
இருந்தாலும் ஆர்பிட்டர் இன்றளவும் செயல்பாட்டில்!
ஆகஸ்ட் இருபத்து மூன்றாம் நாளன்று
அனைவரின் இதயத்துடிப்பும் அதிகரித்த வேளையிலே
ஆறுமணி நான்கு நிமிடத்தில் அற்புதநிகழ்வு!
நாற்பத்தோறு நாட்கள் பயணித்த சந்திரயான்3
தரையிறங்கி சாதித்தது நிலவின் தென்துருவத்தில்!
செயற்கை நுண்ணறிவு மென்பொருளின் செயல்பாடு
வியப்பளிக்கும் வகையில் இருந்தது கண்கூடு!
விண்வெளி ஆய்வில் வியத்தகு சாதனை
அனைத்து விஞ்ஞானிகளின் அர்ப்பணிப்பால் நிகழ்ந்ததன்றோ?
ஈரேழு நாட்கள் புவியிலென்றால், நிலவிலது
ஒருநாளாம்! ஒருநாள் மட்டுமே பகல்பொழுது
இருக்கின்ற தென்துருவம்! பின்னர் உறைபனிதான்!
அற்புதங்கள், ஆய்வுகள் அதற்குள் நிகழ்ந்திடுமே!
அரியபல தகவல்களை உலகறியத் தந்திடுமே!
சிறுவயதில், நிலவில் நாம்கண்ட பாட்டிமுகம்
கற்பனைதான் என்றாலும் கண்டறியத் தூண்டுதலே!
நிலவுக்குச் செல்லும்நாள் வெகுதொலைவில் இல்லையென
புலவர்கள் பாடியது பொய்யில்லை!மெய்யாச்சு!
சரித்திரம் படைத்தோரின் உழைப்பினைப் பாராட்டி
சாதனைகள் தொடர்ந்திட வாழ்த்துரைப்போம் இந்நாளில்!




கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி,புதுச்சேரி

# காதல்

பாயும் ஓடைத்தண்ணீரில்
எங்கோ விழுந்த இலைபோல
நானும் எங்கோ ஏனோ
எதனால் எனகாரணம் அறியாமல்
விழுந்தேன் உன்னுள்ளே!
அதை நீ அறிய ஆசையில்லை
காரணம் அறியாமல் தொடரட்டும்
நம் அழகிய காதலே!



கவிஞர் க.பூமணி,சென்னை

# சேக்கிழார் (தொடர்ச்சி-5)

சேக்கிழார்தம் பெரியபுரா ணந்தன்னில் தனியடியார்
ஆடவர்கள் ஐம்பத்து எண்மரொடு மாதரார்கள்
மாணிருவர் சேர்க்கையால் அறுபதின்மர் ஆவாரே!
சுந்தரரும் பெற்றோர்கள் சடையனாரும் இசைஞானி
கூட்டியதால் அறுபத்து மூவரானார்! தொகையான
அடியவர்கள் தொகுப்பான ஒன்பதொடு ஏழ்பத்து
இரண்டென்பர்! வள்ளுவரின் இணைவுமுண்டு! மணிவாசகர்
திருவாசகம் தனித்தொளிரும்! அதிபத்தர் அப்பூதி
அமர்நீதி அரிவாட்டார் ஆனாயர் இடங்கழியார்
இயற்பகையார் இளையான்குடி மாறர்தாம் உருத்திரபசு
பதிப்பேரார் எறிபத்தர் ஏயர்கோன் கலிக்காமர்
ஏனாதி நாதரென ஐயடிகள் காடவர்கோன்
கணநாதர் கணம்புல்லர் கண்ணப்பர் கலியநாயன்
கழறிற்று அறிவாரும் கழற்சிங்கர் காரிநாயன்
குலச்சிறையார் குங்கிலியக் கலையனாரும் கூற்றுவரும்
கலிக்கம்பர் கோச்செங்கண் கோட்புலியும் சண்டேசர்
சக்திபேரார் சாக்கியரும் சிறப்புலியார் சிறுதொண்டர்
செறுத்துணையும் சோமாசி மாறரொடு தண்டியடிகள்
திருக்குறிப்புத் தொண்டரொடு சம்பந்தர் நாவரசர்
நாளையே போவாரும் நீலகண்டர் நீலகண்ட
யாழ்ப்பாணர் நீலநக்கர் திருமூலர் நமிநந்தி
நரசிங்க முனையரொடு நின்றசீரார் நெடுமாறர்
நேசனாரும் புகழ்ச்சோழர் புகழ்த்துணை பூசலாரும்
பெருமிழலை குரிசிலாரும் மானக்கஞ் சாரரொடு
முருகனாரும் முனையடுவார் மூர்க்கநாயன் மூர்த்தியாரும்
மெய்ப்பொருளர் வாயிலாரும் விரல்மிண்டர் காரைக்கா
லம்மையார் மங்கையர்க் கரசியாரும் சுந்தரரும்
சடையனாரும் இசைஞானி தொகையாளர் ஒன்பதுகுழு
வள்ளுவரும் திருவாசக மணிவாசகர் ஏழ்பத்து
நான்கவர்தம் வரலாறு சிவன்சிந்தை உய்த்திடுமே !




கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# கதை கதையாய்

உணர்வுகளோடு புதைந்திட்ட நேசக் கதை
உள்ளத்தோடு புதைந்திட்ட காதல் கதை

விழிகளோடு இணைந்திட்ட பாசக்கதை
கனவுகளோடு கலந்திட்ட லட்சியக் கதை

மேலோர் கீழோரை சமமாக்கும் சமத்துவக் கதை
இல்லாதோருக்கு உடன் உதவிடும் கருணைக் கதை

தோல்வியுற்றவனை எழுப்பிடும் ஊக்கக் கதை
பாகுபாடு இல்லாமல் இருந்திடும் நட்புக் கதை

அனைவரையும் பாராட்டும் அன்புக் கதை
சேவை மனப்பான்மையுடன் வலம் வரும் கொடைக் கதை

கதைக்குள்ளே கதைத்திடும் கலை அது கதை
கதை என்னும் அகிலமதில் நாடகமும் நடந்திடுமே!



கவிஞர் இரா. கோமதி,பொள்ளாச்சி

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

**பிறப்பும் படிப்பும்**



அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் அ.மு.சரவண முதலியார் - சிவகாமி அம்மையார் தம்பதிக்கு மூத்த மகனாக 1916 நவம்பர் 10 ஆம் தேதி திருச்சி, கல்லணையை அடுத்த அரசங்குடியில் பிறந்தார். தந்தையே தமிழாசிரியராக இருந்ததால் தொடக்கக் கல்வியை தந்தையிடமே பயின்றார். 1930வரை திருச்சியிலும் பின்னர் தந்தை பணியாற்றிய லால்குடி பள்ளியில் 1935-ல் பத்தாம் வகுப்பையும் முடித்தார். சரவண முதலியார் சொற்பொழிவாற்றும் அளவுக்கு ஆழ்ந்த தமிழறிவுடன் பக்தி இலக்கியங்களிலும் நிகரற்று விளங்கினார்.

தான் சொற்பொழிவாற்றச் செல்லும் இடங்களுக்கெல்லாம் ஞானசம்பந்தனையும் அழைத்துச் செல்வார். இதனால் தந்தையின் உரையை மட்டுமின்றிப் பல அறிஞர்களின் உரைகளையும் கேட்கும் கேள்வி முதற்கொண்டே வாய்க்கப் பெற்றார்.

**விளையும் பயிர் முளையிலேயே:**

1927-ல் ஞானசம்பந்தன் தனது ஒன்பதாவது வயதில் திருச்சியை அடுத்த துறையூரில் நடைபெற்ற சைவ சமய மாநாட்டில் முதல் முறையாக மேடையேறிப் பேசினார். ஞானசம்பந்தனின் பேச்சைக் கேட்டுச் மகிழ்ந்த ம.ரா.குமாரசாமிப் பிள்ளை, தாம் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அவருக்கு அணிவித்துப் பாராட்டினார்.

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

## கேட்டு மகிழ்ந்தனர்:



1931-ல் தூத்துக்குடியில் 'செக்கிழுத்த செம்மல்' வ.உ.சிதம்பரம் பிள்ளை ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுபிள்ளை உள்பட அறிஞர்கள் கலந்து கொண்டு பல உரையாற்றினர். இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவெனில் 'சொல்லின் செல்வர்' ரா.பி.சேதுபிள்ளை பேசி முடித்த உடனேயே அரங்கம் காலியாகிவிடுவது வழக்கம். எல்லா மேடைகளிலும் ரா.பி.சேதுபிள்ளையைக் கடைசியாகத்தான் பேசச் சொல்வார்கள். ஆனால், வ.உ.சி.கூட்டிய கூட்டத்தில் ஞானசம்பந்தன் கடைசியாகப் பேசும்படியாகிவிட்டது.

ஆனால், என்ன ஆச்சரியம்! ரா.பி.சேதுபிள்ளையின் பேச்சைக் கேட்டு முடித்ததும் கலையத் தொடங்கிய கூட்டம் ஞானசம்பந்தனின் கணீர் குரலையும் நாவன்மையையும் கேட்டதும் அப்படியே திரும்பி வந்து உட்கார்ந்து கேட்டு மகிழ்ந்தனர்!

## இயற்பியல் தமிழானது

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1937-ல் பிஏ ஆனர்ஸ் (இயற்பியல்) வகுப்பில் சேர்ந்தார். அப்போது தமிழ்த் துறைத் தலைவராக இருந்த நாவலர் சோமசுந்தர பாரதியாரும் தந்தை சரவண முதலியாரும் தமிழை முதல் பாடமாக எடுத்துப் படிக்குமாறு ஆலோசனையும் அறிவுரையும் வழங்கவே இயற்பியல் துறையிலிருந்து தமிழுக்கு மாறினார்.

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

**கலப்பு மணம்**

தந்தையின் எதிர்ப்பையும் மீறி ராஜம்மாள் என்பவரைக் கலப்பு மணம் புரிய முடிவெடுத்தார். இதன் காரணமாக அவரது தந்தை பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டணத்தைக் கொடுக்க மறுத்ததுடன், நாவலர் வேங்கடசாமி நாட்டாரும் எந்த உதவியும் செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார். எனவே வேறு வழியின்றி ராஜம்மாளின் தங்க வளையல்களை வங்கியில் அடகு வைத்தாவது அறுபது ரூபாய்த் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த ஞானசம்பந்தன் முடிவெடுத்தார். சந்தேகப்பட்ட வங்கி அதிகாரி காவல் துறை அதிகாரிக்குத் தகவல் தெரிவிக்க, அவர் துணைவேந்தரிடம் விவரங்களைக் கூறினார்.



தேர்வுக் கட்டணத்தைத் துணை வேந்தராக இருந்த சீனிவாச சாஸ்திரியாரே கட்டி உதவினார். நன்றாகப் படிக்கும் மாணவனது படிப்பு கெடக் கூடாது என்பதற்காகத் துணை வேந்தரே தேர்வுக் கட்டணம் செலுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழகத் தேர்வுகள் முடிந்த பிறகு சென்னை தங்கசாலையில் டாக்டர் தர்மாம்பாள் வீட்டுக்கு அருகே தங்கிக் கொண்டார். நாள்கள் கடந்தனவே தவிர இவரது கலப்புத் திருமணத்துக்கு அப்பா ஒப்புக்கொள்ளவே இல்லை. இனி பொறுத்துப் பயனில்லை என்ற முடிவுடன் டாக்டர் தர்மாம்பாள் தலைமையில் தேவாரத் திருவாசகப் பதிகளை ஓதி திருமணம் செய்து கொண்டார். ஞானசம்பந்தன் - ராஜம்மாள் தம்பதிகளுக்கு மெய்கண்டான், சரவணன் ஆகிய மகன்களும் பங்கயச் செல்வி, சிவகாக சுந்தரி, அன்புச் செல்வி, மீரா ஆகிய நான்கு பெண்களும் பிறந்தனர்.

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

## பணிகள்

1942 முதல் 1956வரை பதினான்கு ஆண்டுகள் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றியபோது 'இலக்கியத் திறனாய்வு' என்னும் பிரிவை அறிமுகப்படுத்தினார். பச்சையப்பன் கல்லூரியை விட்டு விலகி 1856 - 1939வரை சென்னை. அகில இந்திய வானொலி நிலையத்தில் நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றியபோது சிலப்பதிகாரம், மணிமேகலை. கலிங்கத்துப் பரணி, கம்ப ராமாயணம் உள்ளிட்ட தமிழ் இலக்கியங்களை நாடகங்களாக்கினார். இசை மேதை எஸ். இராமநாதன் இசையமைப்பில் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவையையும் தண்டபாணி தேசிகரைப் பாட வைத்துச் சிலப்பதிகார நாடகத்தையும் ஒலிபரப்பினர். இது தேசிய நாடகமாகத் தேர்வாகி இந்தியாவின் அவைத்து வானொலிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பானது.

1959-1962-ல் அப்போதைய கல்வி அமைச்சர் சி சுப்பிரமணியம் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசின் வானொலி நிலையப் பணியிலிருந்து விடுவித்துக்கொண்டு, தமிழக அரசின் செய்திப் துறையில் மொழிபெயர்ப்புப் பிரிவு துணை இயக்குனரானார். பிறகு 1962 - 1963-ல் தமிழ் வெளியீட்டுத்துறையின் பொதுச் செயலராகவும் 1963-67-ல் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறை இணை இயக்குனரகாவும் 1967-1970-ல் தமிழக அரசு தமிழ் வெளியீட்டுத் துறை இயக்குனராகவும் பல்வேறு பொறுப்புகளைத் திறம்பட வகித்தார். தமிழ்நூல் வெளியீட்டுப் பிரிவில் பணியாற்றியபோது சற்றேறக் குறைய 375க்கும் மேற்பட்ட அறிவியல் நூல்களைத் தமிழில் வெளிட்டார். 1970-73-ல் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் தெ.போ.மீனாட்சி சுந்தரனார் விருப்பத்துக்கு ஏற்பத் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

## எழுதிய நூல்கள்:

'நடைச்சித்திரம்' என்னும் புதிய அடிப்படையில் 'சான்றோர் ஆக்கிய பெற்றோர்', 'வாழ்க்கையை வகையின் திசை திருப்பிய திரு.வி.க, 'தெ.பொ.மீ', 'நாவலர் வெங்கடசாமி நாட்டார்', 'விபுலாநந்த அடிகள்', 'கம்பன் அடிப்பொடி சா.கணேசன்', 'தினமணி ஏ என் சிவராமன்', 'ராஜாஜி', 'பெரியார்'. 'மர்ரே ராஜம்' உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட பெருமக்கள் குறித்த பதிவே இவர் எழுதிய 'நான் கண்ட பெரியவர்கள்' என்னும் நூலாகும். 'கம்பன் ஒரு புதிய பார்வை' என்ற நூல் அவருக்குச் சாஹித்ய அகாதமி பரிசைப் பெற்றுத் தந்தது. வடமொழி வல்லுனர் கேஆர் நஞ்சுண்டனுடன் உதவியுடன் 'பெரிய புராணம் - ஓர் ஆய்வு என்னும் நூலை எழுதினார்.





'திருவாசகம் சில சிந்தனைகள்' என்ற தலைப்பில் 5 தொகுதிகளாகப் படைத்துள்ளார். திருவாசகத்தை விஞ்ஞானக் கண்கொண்டு உரை எழுத வேண்டும் என்று தூண்டியவர் திரு.வி.க.

இவர் எழுதிய மொத்த நூல்கள் 35. மொழிபெயர்ப்புகள் 3. ஒவ்வொன்றும் பலாச்களை என்றாலும். இவற்றுள் கம்ப இராமாயணத்தை ஆய்ந்து எழுதிய 8 நூல்கள் ('இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்", 'கம்பன் கண்ட நாடும் மன்னனும், அரசியர் மூவர்", "'தம்பியர் இருவர்', 'கம்பன் கலை', 'கம்பன் புதிய பார்வை' "பன்முக நோக்கில் இராமன்', 'கம்பன் எடுத்த முத்துக்கள்"), பெரிய புராணத்தை ஆய்ந்து எழுதிய 3 நூல்கள் ('தேசிய இலக்கியம்'. "சேக்கிழார் தந்த செல்வம்', 'பெரிய புராணம் ஓர் ஆய்வு") மற்றும் 'திருவாசகச் சிந்தனைகள் ஆகியவையாகும்.

# அ.ச. ஞானசம்பந்தன்

(கட்டுரை)

**திரு.வி.கவுடன் உறவு:**


தமிழ்த்தென்றல் திரு.வி.க.

திரு.வி.கவுடன் அ.ச.ஞாவுக்கு இருந்த உறவு உணர்வுபூர்வமானது. திரு.வி.க அவரைத் தனது மகனாகவே பாவித்தார் எனில் மிகையில்லை. தான் இறந்தால் தனக்குக் கொள்ளி வைக்க வேண்டும் என்று உயிருடன் இருந்தபோதே திரு.வி.க இருவருக்கு அன்புக் கட்டளையிட்டார். அவ்விருவருள் ஒருவர் டாக்டர் மு. வரதராசனார். மற்றொருவர் அ.ச.ஞானசம்பந்தன். பேச்சாளராக இருந்த அ.ச.ஞா. எழுத்தாளராக மாறியதற்கு திரு.வி.க. வே காரணம் என்கிறார்.

"எனக்கு இலக்கண இலக்கியங்களில் ஏதேனும் சந்தேகம் வந்தால் கேட்டுத் தெளிந்து கொள்ளும் இருவர் கி.வ.ஜ. மற்றும் அ.ச.ஞ" என்று குன்றக்குடி அடிகளார் கூறியுள்ளார்.

சொற்பொழிவாளர், எழுத்தாளர், திறனாய்வாளர், படைப்பாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகத் திறமை கொண்ட அ.க. ஞானசம்பந்தன் 27.8.2002-ல் தனது 85 ஆவது வயதில் மறைந்தார். அவரது நினைவைப் போற்றும் வகையில் அடுத்த ஆண்டு அவருக்குச் ’சிறப்பு அஞ்சல் உறை வெளியிட்டு அரசு பெருமைப்படுத்தியது.

.

நன்றி
தமிழ் அறிஞர்கள் - ஜனனி ரமேஷ்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
நல்லவர்கள் செய்யும் உதவி,
பூமிக்கடியில் இருக்கும் நீர்போல.
தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாது–ஆனால்
பூமியின் மேற்பரப்பில் பயிர்பச்சைகளை
செழுமையாக வளரச்செய்யும்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com